

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 197 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 15 – செவ்வாய்க்கிழமை 27 பிப்ரவரி 2024 – மதுரை 10 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 197 : Thiruvalluvar Year - 2055 - Maasi 15 - Tuesday 27 February 2024 - Madurai 10+12 Pages ₹ 5.00


## இலவசப் பேருந்து பயணத்தினால்

# மேன்மையடைந்து வரும் தமிழ்நாட்டு மகளிர்!

## மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில ஏடு புகழாரம்!

**சென்னை, பிப். 27-**

**தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் இலவசப் பேருந்து பயணத் திட்டத்தால், தமிழ்நாட்டு மகளிர் மேன்மை அடைந்து வருகின்றனர் என்று ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது.**

நகரப் பேருந்துகளில் மகளிருக்கான விடியல் பயணத் திட்டத்தினால் பெண்களுக்கான சேமிப்பு உயர்ந்துள்ளதுடன், அரசு அளிக்கும் மானியத்தால், போக்குவரத்துக் கழகங்களின் வருவாயும் அதிகரித்துள்ளதாகவும் ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் பாராட்டு தெரிவித்துள்ளது.

நகரப் பேருந்துகளில் பெண்களுக்கான கட்டணமில்லா பயணத் திட்டத்தின் நன்மைகள் குறித்து ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் சிறப்புக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. சென்னை, கோவை, சேலம், நெல்லை உள்ளிட்ட நகரங்களில், கட்டணமில்லா பேருந்துகளில் பயணம் செய்யும் பெண்களிடம் சி.ஏ.ஜி. (Citizen consumer and civic Action Group) அமைப்பு நடத்திய ஆய்வு அறிக்கை வெளியாகி உள்ளது.

அதன்படி, இத்திட்டத்தினால், மாதம் ஆயிரம் ரூபாய் வரை தங்களால்



சேமிக்க முடிவதாக பெண்கள் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சேமிப்பு, பிள்ளைகளின் கல்வி மற்றும் உணவுத் தேவைக்கு உதவியாக உள்ளதாகவும், ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளதாகவும் அக்கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், கட்டணமில்லா பயணத் திட்டத்திற்காக அதிகபட்ச தூரத்தை கணக்கிட்டு, ஒரு பயணச் சீட்டுக்கு 16 ரூபாய் மானியமாக மாநில அரசு வழங்குவதால், போக்குவரத்துக் கழகங்களுக்கு வழக்கமானதைவிட கூடுதல் வருவாய் கிடைப்பதாகவும், போக்குவரத்துக் கழகங்களுக்கு 16 ஆயிரத்து 788 கோடி ரூபாய் அரசின் மானியம் கிடைத்துள்ளதாகவும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முக்கியமான 6 நகரங்களில் தொடர்ந்து பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும் 3 ஆயிரம் பெண்களிடம் அவர்களின் இலவசப் பயணம் தொடர்பாக சர்வே எடுக்கப்பட்டது.

அந்த சர்வே முடிவின்படி அவர்கள் மட்டும் பயனடையாமல் பேருந்து கழகங்களும் பலனடைந்து வருவது தெரியவந்துள்ளது. வரிப் பணம் மீண்டும் பகிர்ந்தளிக்கப்படுவது, நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு பயன்கள் கிடைக்கப் பெறுவதும் தெரியவந்துள்ளது.

தி.மு.க. அரசின் இந்த கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் அரசியல் காரணங்களுக்காக வேண்டுமானால் சிறிதளவிலான விமர்சனங்கள் எழுகிறதே தவிர, உண்மையில் அத்திட்டம் ஏழைகளுக்கான நலத் திட்டமாகத்தான் உள்ளது.

சென்னையில் 50 சதவிகித பேருந்துகள் (சுமார் 1500 பேருந்துகள்) மட்டுமே மகளிர் கட்டணமில்லா பேருந்துகளாகச் செயல்படுவதால் பயணிக்கும் மகளிர் கூட்டம் நிரம்பி வழிவதால் அது குறித்து எதிர்மறை விமர்சனங்கள் இருந்தாலும் அத்தனை மகளிரும் பயனடைவதை பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு இலவச டிக்கெட்டுக்கும் அரசு ரூபாய் 16 நஷ்ட ஈடு வழங்குவதால், பேருந்து கழக நிர்வாகத்திற்கும் கணிசமான தொகை கிடைக்கிறது. மகளிர்க்கு இலவசப் பயணம்; ஆனால் அதற்கான டிக்கெட்டாய் நிர்வாகத்திற்கு நஷ்டஈடு கிடைத்து விடுவதால் இது இன்னொரு பக்கம் பயன் என்றும் கருதலாம்.



While Women Benefit From Free Fares, The Scheme Also Boosts Revenue And Ridership For Transport Corporations And Reduces Congestion And Pollution

WHEELS OF THE BUS GO WIN, WIN, WIN

OTHER SPIN-OFFS FROM WOMEN'S FREE TRAVEL INCLUDE WOMEN BEING ABLE TO TRAVEL LONGER DISTANCES WITHOUT EXTRA EXPENDITURE, TO ACCESS EMPLOYMENT,

பொது விநியோக முறை மூலம் உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதைப் போன்றே மக்களின் வரிப்பணம், கட்டணமில்லா பேருந்து பயணத்திற்காக செலவிடப்படுவதை எப்படி குறைகூற முடியும் என்றும் கேள்வி எழுப்பி உள்ள ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ கட்டுரை, இத்திட்டத்தை குறைகூறுவது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும் தெரிவித்துள்ளது.

---

## சம்பா, தாளடி பருவத்தில்

# 2.53 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்!

## உடனடி பணம் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி

*தஞ்சை, பிப். 27 -*

தஞ்சை மாவட்டத்தில் நடப்பு சம்பா, தாளடி பருவத்தில் அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளது. இதுவரை 513 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 2,53,766 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா, தாளடி பருவத்தில் தற்போது வரை 1,18,623 எக்டர் பரப்பில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 60 சதவீதம் பரப்பில் அறுவடை பணிகள் நிறைவடைந்துள்ளன. தற்போது அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் சன்ன ரகம் ஒரு கிலோ ரூ.23.10க்கும், மோட்டா ரகம் ரூ.22.65க்கும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் தற்போது வரை 513 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 2,53,766 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

விற்பனை செய்யப்படும் நெல்லிற்கு உண்டான தொகை உடனடியாக விவசாயிகளுக்கு ரூ.2 கோடி மின்னணு வங்கிப் பண பரிவர்த்தனை மூலமாக வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட முழுவதும் தற்போது நெல் அறுவடை முழு வீச்சில் நடந்து வருகிறது.

இதனால் நேரடி கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் நெல்லை விற்பனை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். அரசின் இந்த நடவடிக்கைக்கு விவசாயிகள் பாராட்டு தெரிவிக்கின்றனர். நெல் தேக்கமடையாமல் தினமும் குறைந்தபட்சம் ஆயிரம் மெ.டன். ஒவ்வொரு நேரடி கொள்முதல் நிலையங்களிலும் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சென்ற ஆண்டை காட்டிலும் கூடுதலாக நெல் கொள்முதல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்டம் முழுவதும் விவசாயிகள் மற்றும் தனியார் நெல் அறுவடை இயந்திர உரிமையாளர்களின் கருத்துக்களை கேட்டறிந்ததன் அடிப்படையில் பெல்ட் டைப் தனியார் நெல் அறுவடை இயந்திரங்களுக்கு மணிக்கு வாடகையாக ரூ.2,500/,ம் டயர் டைப்க்கு ரூ.1,750/ வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நிர்ணயம் செய்யப்பட்ட இந்த வாடகைத் தொகைக்கு மிகாமல் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்து கொண்டு அறுவடை இயந்திர உரிமையாளர்கள் இயந்திரங்களை பணியில் ஈடுபடுத்தி ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று மாவட்ட அதிகாரி கேட்டு கொண்டுள்ளார். நடப்பு கோடை பருவத்தில் 1200 எக்டர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1,14,601 எக்டர் சம்பா பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**வாடகை விதி மீறல் புகார் தர அழைப்பு!**

நிர்ணயிக்கப்பட்ட வாடகையை விட கூடுதலாக விவசாயிகளிடமிருந்து வாடகை வசூல் செய்தால், புகார் தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் வருவாய் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்களிடம் புகார் தெரிவிக்கலாம்.

மேலும் மாவட்ட ஆட்சியரகத்தில் இயங்கிவரும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண், தஞ்சாவூர், செயற்பொறியாளர்(வே.பொ) எண். 90035 23343, தஞ்சாவூர், உதவி செயற்பொறியாளர் (வே.பொ) எண். 94431 17138, கும்பகோணம், உதவி செயற்பொறியாளர்(வே.பொ) எண். 94436 78621, பட்டுக்கோட்டை, உதவி செயற்பொறியாளர் (வே.பொ) எண். 99761 93110 மற்றும் தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலர் எண். 94420 93161, தஞ்சாவூர், மோட்டார் வாகன ஆய்வாளர் எண். 93848 08537, கும்பகோணம், மோட்டார் வாகன ஆய்வாளர் எண். 99947 72510, பட்டுக்கோட்டை மோட்டார் வாகன ஆய்வாளர் எண். 93848 08366 என்ற எண்களில் புகார் தெரிவித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

★ நெல் தேக்கமடையாமல் தினமும் குறைந்தபட்சம் ஆயிரம் மெ.டன். ஒவ்வொரு நேரடி கொள்முதல் நிலையங்களிலும் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சென்ற ஆண்டை காட்டிலும் கூடுதலாக நெல் கொள்முதல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## டிரைவர் இன்றி

# 70 கி.மீ. தூரம் ஓடிய சரக்கு ரெயில்!

## அதிகாரிகள் அதிர்ச்சி! விசாரணை நடத்த முடிவு!

*ஜம்மு, பிப். 27 -*

காஷ்மீரில் இருந்து பஞ்சாப் வரை டிரைவர் இல்லாமல் ஓடிய சரக்கு ரயில்: மணிக்கு 100 கி.மீ வேகத்தில் சென்றதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது!

ஜம்மு - காஷ்மீரில் இருந்து பஞ்சாப் வரை ஓட்டுநர் இல்லாமல் ஒரு சரக்கு ரயில் 70 கிமீ தூரம் ஓடிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஜம்மு-காஷ்மீரின் ஜம்முவில் இருந்து பஞ்சாப் மாநிலம் ஜலந்தருக்கு நேற்று முன்தினம் காலை சரக்கு ரயில் சென்றது. 53 பெட்டிகளை கொண்ட அந்த ரயில் காலை 7.25 மணிக்கு கத்துவா ரயில் நிலையத்திற்கு வந்தது. அங்கு ஓட்டுநர்கள் மாற்றப்பட வேண்டும் என்பதால் டிரைவர் மற்றும் உதவி டிரைவர் ஆகியோர் ரயிலில் இருந்து கீழே இறங்கியுள்ளனர்.



அப்போது சரிவாக இருந்த அந்த பாதையில் ரயில் திடீரென நகர்ந்தது.

ரயில் வேகமாக ஓடியதால் அங்கிருந்த ரயில்வே அதிகாரிகள், பணியாளர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. ரயில் வேகமாக ஓடியதால் அந்த தடத்தில் உள்ள அனைத்து ரயில் நிலையங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு ரயில் பாதையை யாரும் கடக்க வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது. சாய்வான பாதை என்பதால் சில பகுதிகளை கடக்கும் போது ரயில் மணிக்கு 100 கி.மீ வேகமெடுத்தது பரபரப்பை ஏற்படுத்தியது. நீண்ட போராடத்துக்கு பின் காலை 9 மணிக்கு பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஊஞ்சி பாசின் என்ற மேடான பகுதியில் தண்டவாளத்தில் மணல் மூட்டைகள் போட்டு ரயில் நிறுத்தப்பட்டது.

இதற்கிடையில் ரயில் 70 கிமீ தூரத்தை கடந்து விட்டது. ஓட்டுநர் இல்லாமல் ரயில் ஓடிய வீடியோ காட்சிகள் இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இது குறித்து கூறிய வடக்கு ரயில்வே அதிகாரிகள்,“70 கிமீ தூரம் டிரைவரின்றி ஓடிய ரயில் ஊஞ்சி பாசின் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. இதில், உயிர் சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில்லை. இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது” என்றனர்.

டிரைவர் ரயிலில் இருந்து இறங்கும் போது ஹேண்ட்பிரேக் போடாமல் இறங்கி விட்டதால் இச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.